[1987 நவம்பர் 12

தண்ணீர்தான் கிடைக்கிறது. கண்டப்பங்குறிச்சி அருகில் மணிமுத்தாறு நதி ஓடுகிறது. அந்த மணிமுத்தாறு நதியிலிருந்து தண்ணீர் எடுத்தால், அந்தக் கிராம மக்களுக்கு நல்ல தண்ணீர் கொடுக்க முடியும். ஆகவே மணிமுத்தாறு நதியிலிருந்து தண்ணீர் எடுத்து ஓவர் டாங்க் மூலமாகத் தண்ணீர் அவர்களுக்குக் கொடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம் : தலைவர் அவர்களே, மணிமுத்தாறு நதியிலிருந்து சில இடங்களில் தண்ணீர் எடுத்துக் கொண்டு வருகிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அதுபற்றிய விளக்கங்களைத் தருவார்களானால், அதையும் குடிநீர் வடிகால் வாரியத்தில் இருக்கிற பொறியாளர்களை வைத்துப் பரிசீலிக்கலாம்.

கரும்பு பண்ணை கார்ப்பரேஷன்.

68—(*வினா எண். 15570)—திருமதி. பா. வளர்மதி : மாண்புமிகு தொழில் மற்றும் வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

அரசு கரும்புப் பண்ணை கார்ப்பரேஷனைக் கலைப்பது பற்றி அரசு பரிசீலித்து வருகிறதா ?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : துணைத் தலைவர் அவர்களே, ஆம்.

திரு. கோ. வீரய்யன் : மாண்புமிகு துணைத்தலைவர் அவர்களே, நம்முடைய அமைச்சர் அவர்கள் ''ஆம்'' என்று சொல்லி இருக்கிறார்கள். இந்தக் கரும்புப் பண்ணைக் கழகம் 70 இலட்சம் ரூபாய் நட்டத்தில் இருக்கிற போதே அதனைக் கலைத்து அந்த நிலத்தை நிலமற்ற ஏழைகளுக்கு விநியோகிக்க வேண்டுமென்று 4, 5 ஆண்டுகளுக்கு முன்பே நாங்கள் வற்புறுத்தினோம். காலம் நீடிக்க நீடிக்க ஒவ்வொரு ஆண்டும் அந்த நட்டத்தின் அளவு உயர்ந்து ஏறத்தாழ 1 கோடியே 20 இலட்சம் ரூபாய் அளவிற்குச் சென்றிருப்பதாகச் சொல்லப்படுகிறது. முன்பு ஒரு கேள்விக்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் அளித்த போது தொழில்களை அரசு நட்டத்தில் நடத்த முடியாது என்று சொன்னார்கள். எனவே இந்தப் பண்ணையை தொடர்ந்து நட்டத்தில் நடத்திக் கொண்டிருப்பதை மாற்றி அதனை கலைத்து சீக்கிரமாக நிலத்தை நிலமற்ற ஏழைகளுக்கு விநியோகிப்பதற்கும், அதில் பணி புரிகிற பணியாளர்களுக்கு உரிய பாதுகாப்பினை அளிப்பதற்கும் அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம் : துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதைப் போல 1986 ஆம் ஆண்டு வரையில் 176 இலட்சம் ரூபாய் அளவிற்கு இந்தப் பண்ணைக் கழகம் நட்டம் அடைந்திருக்கிறது.

1987 நவம்பர் 12]

முதலில் சொல்கிறபோது நிலமற்ற ஏழை விவசாயிகளுக்கு அந்த நிலத்தைக் கொடுக்கலாம் என்றும், இரண்டாவதாகச் சொல்கிற போது அங்கே வேலை செய்பவர்களுக்குப் பாதுகாப்பு அளிக்க வேண்டுமென்றும் சொன்னார்கள். இப்போது இருக்கிற பிரச்சினை என்னவென்றால் தமிழக அரசுக்குச் சொந்தமான பெரிய பண்ணை அது ஒன்றுதான் இருக்கிறது. 4,051 ஏக்கர் நிலம் அங்கே இருக்கிறது. அதைப் பிரித்துக் கொடுத்துவிட்டால் ஆளுக்கு 30, 30 சென்ட் அளவிற்குத்தான் வரும். அவ்வளவு தான் தேறும். அதைக் கொடுத்து விடுவதா அல்லது அதை வைத்துக் கொள்வதா என்றால் இப்போது நிறைய சர்க்கரை ஆலைகளுக்கு உரிமங்கள் கிடைத்திருக்கின்றன. வடபாதி மங்கலத்தாருக்குச் சொந்தமாக இருக்கிறபோது அங்கே ஏற்கனவே கரும்பு பயிரிட்டு இருக்கிறார்கள். அதையெல்லாம் நான் விசாரித்தேன். ஆகவே அதை எடுத்து ஒரு கரும்புப் பண்ணையாக மாற்றி ஒழுங்கு படுத்தலாமா என்பதைப் பற்றி ஆராய்ந்து கொண்டிருக்கிறோம். அதை ஒழுங்குபடுத்துவதில்தான் தற்போது கவனம் செலுத்திக் கொண்டிருக்கிறோம்.

திரு. பொ. உத்திராபதி : தலைவர் அவர்களே, வடபாதி மங்கலத்தில் இருக்கிற இந்தக் கரும்புப் பண்ணை என்பது தமிழ்நாடு நிலச்சீர்திருத்தத்தின் மூலம் தியாகராஜ முதலியார் அவர்களிடமிருந்து அரசாங்கம் எடுத்த உபரி நிலமாகும். 4,100 ஏக்கர் நிலமிருக்கிறது. இன்றைக்கு வெளிநாடுகளுக்கெல்லாம் போய்ப் பார்க்கிறபோது இப்படி ஒரு பெரிய பண்ணை மொத்தமாக இருப்பதை அமைச்சர்கள் எல்லாம் வரவேற்றுப் பாராட்டி இருக்கிறார்கள். நான் தெரிவிப்பது என்னவென்றால் தமிழகத்தில் அடைத்தாற்போல ஒரே இடத்தில் நஞ்சை நிலம் 4,000 ஏக்கர் அளவிற்கு பண்ணையாக கிடைப்பது மிக மிக அரிதாகும். ஆகவே நல்ல நிலமிருக்கிறது. இன்றைக்கு கோயமுத்தூரில் இருக்கிற விவசாயப் பண்ணை மற்ற பண்ணைகளை எல்லாம் இதிலே ஈடுபடுத்தி பல்வேறு வகைகளில் இந்தப் பண்ணையை அபிவிருத்தி செய்வதற்கும், மேலும் வலுப்படுத்துவதற்கும், அந்தத் தொழிலாளர்களுக்கு வேலை கொடுப்பதற்கும் முயற்சிக்க வேண்டும். இப்போது தண்ணீர் வந்து கொஞ்சம் விவசாயம் செய்து கொண்டிருக்கிறார்கள். அமைச்சர் அவர்கள் இந்த ஆண்டே பணம் கொடுத்து அந்த விவசாயத்தைப் பாதுகாப்பதற்கும், அந்தப் பண்ணையை மேலும் வலுப்படுத்தி தமிழக அரசுக்கு நல்ல பெயர் கிடைப்பதற்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் காலத்தில் உரிய நடவடிக்கைகளை எடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம் : துணைத் தலைவர் அவர்களே, இது நல்ல யோசனை. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதைப் போல விவசாயப் பல்கலைக் கழகத்திற்கு கூட இந்தப் பண்ணையை எடுத்து காரியங்கள் செய்யலாம் அல்லது ஆடுதுறை பண்ணை போல ஒரு விவசாய ஆராய்ச்சிப் பண்ணையாகக்கூட இதனை மாற்றலாம். பல்வேறு வசதிகள் இங்கே இருக்கின்றன. ஆகவே இதுபற்றி அதிகாரிகளிடத்தில்

ஏற்கெனவே கலந்து பேசிக் கொண்டிருக்கிறேன். தொடர்ந்து பேசி அதன் மூலம் இந்த அரசுக்கு நல்ல பெயர் கிடைக்கிற காரியங்களைச் செய்வேன் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

தஞ்சாவூர், குந்தவை நாச்சியார் அரசினர் மகளிர் கலைக் கல்லூரி.

69—(*வினா எண். 7070)—திரு. எஸ். இராசாராமன் : மாண்புமிகு கல்வி மற்றும் சட்டத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சாவூர், குந்தவை நாச்சியார் அரசினர் மகளிர் கலைக் கல்லூரியில், வணிகவியல், வேதியியல், இரசாயனவியல் மற்றும் பல பிரிவுகளில் பேராசிரியர்கள், உதவிப் பேராசிரியர்கள் இடங்கள் பூர்த்தி செய்யப்படாமல் இருப்பதை அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது அந்த இடங்கள் நிரப்பப் படும் ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, (அ) இந்தக் கல்லூரியில் முதலில் வேதியியல் பேராசிரியர், இயற்பியல் மற்றும் வணிகவியல் ஆகிய பாடப் பிரிவுகளில் உதவிப் பேராசிரியர் பணியிடங்கள் பூர்த்தி செய்யப்படாமல் இருந்தன.

(ஆ) தற்போது வேதியியல் பணியிடங்கள் நிரப்பப்பட்டு இருக்கின்றன. மீதி இடங்களுக்கு எம்ப்ளாய்மென்ட் எக்சேஞ்சிலிருந்து நபர்கள் பெறப்பெற்று அது பரிசீலனையில் இருக்கிறது.

திரு. எஸ். இராசாராமன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த மகளிர் கலைக் கல்லூரியில் படிக்கின்ற மாணவிகள் பேராசிரியர்கள் இல்லாத குறைபாட்டினால் தேர்வு எழுதுவதற்கு மிகவும் கஷ்டப்படுகிறார்கள். படித்துப் பட்டம் பெற்ற பேராசிரியர்கள் தமிழகத்திலே எத்தனையோ பேர்கள் இருக்கின்ற இந்த காலக் கட்டத்திலே உடனடியாக அந்தக் காலியிடங்களை நிரப்புவதற்கு அரசு முன் வருமா ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வேதியியல் பணியிடங்கள் நிரப்பப்பட்டு விட்டன. பிற பணியிடங்களுக்கு கல்லூரிக் கல்வி இயக்குநர் அவற்றை நிரப்புவதற்கு எம்ப்ளாய்மென்ட் எக்சேஞ்சிலிருந்து பெயர்களைப் பெற்று, தேர்வு நடத்தியிருக்கிறார்கள். அது தற்போது நிரப்பப்பட உள்ளன.

திரு. எஸ். இராசாராமன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தஞ்சையிலே இன்னொரு அரசு ஆண்கள் கலைக் கல்லூரி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. அந்தக் கல்லூரியில் வேலை பார்க்கின்ற பேராசிரியர்கள் இந்த மகளிர்